மதிக்கிறோம்; மரியாதை தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஆனால், அண்ணா அவர்களுடைய பெயரை அறிவித்த பிறகு இரண்டு பெயர்கள் ஒன்றோடொன்று மோதும் நிலைமை ஏற்பட்டு, வருந்தத்தக்க சூழ்நிலை உருவாகி, இரண்டு பெயர்களும் இல்லை என்று ஆனபிறகு, ஒரு பொதுவான முடிவுக்கு வருவதுதான் சாலப் பொருத்தமாகும். இதற்குமேல் அவர்கள் இப்படிப்பட்ட கிளர்ச்சியில் இறங்குவது நல்லதல்ல. அதைத்தான் நான் இந்த மன்றத்தின் மூலமாக அவர்களுக்கு அறிவித்துக் கொள்ளுகின்றேன்.

Reorganisation of Information Department

* 226 *Q.*—THIRU A. M. RAJA: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to streamline the Information Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தகவல் துறையைச் சீரமைப்பதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

Agitation against increase in postal rates

* 227 *Q.*—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. Chief Minister be pleased to state the number of arrests made in this State in connection with the agitation against increase in postal rates district-wise?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கோரப்பட்டுள்ள செய்திகளடங்கிய விவர அறிக்கை பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.[a]

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தக் கிளர்ச்சியில் கைது செய்யப்பட்டவர்கள் மீது ஏதாவது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறதா? இந்தக் கிளர்ச்சியில் திராவிட முன்னேற்றக் கழகம் பங்குகொள்ளவில்லை. அதனால் அஞ்சல் கட்டண விதங்களை உயர்த்துவதை ஒத்துக் கொள்ளுகிறதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காங்கிரசும் பங்கு பெறவில்லை. அவர்கள் ஒத்துக்கொள்ளுகிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை.

THIRU K. VINAYAKAM: Is it not a fact that Congress Government at the Centre has levied this increase in tariff on postal rate? The Congress Party has not taken part in this agitation. Is it not a fact that the D.M.K. Party which was against this kind of increase was silent when this agitation was launched by other anti-Congress parties?

---

[a] 371-ம் பக்கத்தில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.